ஓம் தத்ஸத்.

ஆஞ்சநேயர் துணை. ஸ்ரீவிலக்ஷணானந்த குருசகாயம்.

# கொழுத்த சிரிப்பு.

எனும்

## நிர் மூலவைத்தியர் கதை.



இவை

சிறுமணவூர்

## முனிசாமி முதலியார்

இயற்றியதை

மதுரைத்தாலூகா வில்லாபுரம்

பி. கே. நாராயணன் அண்கோ.,

புரோப்ரைட்டர்

பி. கே. என் பொன்னுசாமி பிள்ளையால்

சாத்தூர் சுப்பிரமணிய விலாஸம் பிரஸில்

பதிப்பிவிக்கப்பட்டது.

ரிஜிஸ்ட்டர். ( அணா 2.

1924.

0-, 892mmm,k
N24.
18184

ஓம்தத்ஸத்.

# கொழுத்த சிரிப்பு,

## எனும் நிர்மூல வைத்தியர் கதை.

துஷ்ட—து. ன்—மகாப்பிரபு நமது சமஸ்தான வைத்திய பண்டிதரைத் திறமை போதாதென்று தள்ளிப்போட்ட சங்கதி கேள்விப்பட்டு வெகு தூரத்திலிருந்து வைத்தியர் வந்திருக்கிறார். அவருக்கு மிஞ்சினவர் உலகத்திலில்லையாம், மகாநிபுணராம்; தமதுபேட்டியைக் காணவேணுமாம். உத்திரவுதானுமகாப்பிரபு?

அநியாய—ம. ன் சரி மெத்த சந்தோஷம்! தேடிப்போன மூலிகை காலில் பட்டதுபோல நல்ல சமயத்தில் வந்து ஒத்துக் கொண்டார் குட்டாக சட்டென்று உள்ளே வரச்சொல்லு.

துஷ்ட—து. ன் ஐயா வைத்தியரே! உன் அதர்ஸமே அதர்ஸம்! நீ புறப்பட்ட வேளை நல்ல சகுணமாயிருக்கும் மேலுமுன் முகத்திலே கழுதை முளிச்சியிருக்கும் நல்ல கஞ்சி மாட்டிக் கிச்சி லொடக்கென்னு உள்ளே பூடு.

நிர்மூல வைத்தியன்.

அடியேன். அடியேன் அநியாயத்துக்கும் அதர்மத்திற்கும் அபாண்டத்திற்கும் கொலைப்பாதகத்திற்கும் கொடுங்கோலுக்கும் அடியேன் நமஸ்காரம். வைத்தியன் சுவாமி.

அநியாய—ம—ன் ஐயா—வைத்தியரே, உமது ஜாடை பார்த்தால் வெளி தேசத்துமனிதனைப்போல் காட்டுகிறது. நீர் எந்த ஊரு உமது பேரென்ன?

நிர்—மூல-வ. ன்— மகாப்பிரபு. ஆதியில் நாம் சதுர கிரிமலையில் பிறந்தோம். சாம்பிராணி மலையில்சிலகாலமிருந்தோம் இம

யகிரியில் எழெட்டு வருஷம் வாசஞ்செய்தோம் விராலிமலையில் வெகு காலமிருந்தோம் திரும்பி திருக்கோணமலைக்குவந்தோம் அப்புறம் அஸ்தமானகிரிக்குப் போனோம் பொதிகைமலையில்தான் அதிகநாளிருந்தோம். அந்தவேலையை முடித்துவிட்டு உதயகிரியைப்பார்க்கலாமென்று கிழக்கே திரும்பினோம் இடையில் தமது பேரைக்கேட்டு அப்புறம்போக ஆசையில்லை. என்பெயர் நிர்மூல வைத்தியன் இதோ குப்புரப்படுத்துவிட்டேன் நமஸ்காரம் பிரபு

அபிபாய-ம. ன்—ஐயா நிர்மூல வைத்தியரே, தாங்கள் சொன்ன மலைகளெல்லாம் சரி. பொதிகைமலையில் மாத்திரம் அதிககாலமிருந்ததாகவும் அனேகம் பேரைத் தீர்த்து விட்டதாகவும் அப்புறம் திரும்பினதாகவும் சொன்னீரே அதென்ன சமாச்சாரம்.

நிர்மூல-வ. ன்—அங்குஷ்டப் பிரமாணமுடைய அந்த அகத்திய முனிவனை மகா நிபுணனென்று எண்ணிக்கொண்டு ஏமார்ந்த சேனைகிரியெல்லாம் கும்பு கும்பாய்க் கூடிக்கொண்டு பொதிகை மலை நிறைய புழுக்களாட்டம் நெளிந்துக் கொண்டிருந்தார்கள்; அந்தச்சமயத்தில் நான் ஒருவன் மாத்திரம் அந்த பொதிகைமலையிலில்லாவிட்டால் போஜனமெல்லாம் அடியோடு திரும்பி இன்னமும் மருந்துங் கையுமாகத்தான் மல்லாடிக்கொண்டிருப்பார்கள். எந்தத்தெய்வமோ குறுக்கேயிருந்து என் கண்ணிலகப்பட்ட படியால் அவ்வளவு ஜனத்திற்கும் ஒவ்வொரு வேளை மருந்திலேயே பொட்டுபொட்டென்று நாச்சேத்திமாத்ரா வைகுண்டயாத்ரா என்று தீர்த்துவிட்டேன்- அப்புரம் அகத்தியனுக்கே வயிற்றுநோய்கண்டு அல்லாடிக்கொண்டிருந்தமையால் ஒரே வேளை மருந்தில் ஆளைக்கிளப்பி சமாதியில் வைத்து விட்டு பொதிகைமலை புழுதியான பிறகு தான் தங்கள் சீமையையும் ஒரு கை பார்க்கலாமென்று திரும்பிவிட்டேன்.

அபிபாய-ம. ன்—மெத்த சந்தோஷம் ஆனால் அப்பேர்க்கொத்த மருந்தெல்லாம் தங்கள் கையிலிருக்கிறதா நிர்மூல வைத்தியரே!

181816 ...னை-600 008

நிர்மூல-வ. ன்—அதற்கென்ன தடையா? மகாப்பிரபு.

அநியாய-ம. ன்—ஆனால் அப்பேர்க்கொத்த ஔஷதமும் அவ்வளவு தைரியமும் உம்மிடத்திலிருக்கிற பட்சத்தில் இன்று முதல் நமது சமஸ்தான வைத்தியராக இருந்து உமது வாழ் நாளை நமது கால்மாட்டிலேயே ஒழித்துவிடலாம். அதிருக்கட்டும். இன்றையதினம் நமக்கு ஏதோ உடம்பு ஒரு மாதிரியாயிருக்கிறது; கைதாது என்னமாயிருக்கிறது பார்த்துச்சொல்லுமையா பண்டிதரே?

நிர்மூல-வ. ன்—மஹாப்ரபூ! கைதாது கியாழச்சட்டியைச் த்தான்நோக்குது. எப்படியெனில் வாதநாடி வரண்டோடுது பித்தநாடி பிரண்டோடுது சிலேஷ்மநாடி சேப்பங்கட்டுது. இதற்குத்தக்க ஔஷதப் பிரயோகம் பண்ணுவிட்டால் பிராணனுக்கு பரகாயப்பிரவேசம் பொழுதோடே பலிக்கும்.

அநியாய-ம. ன்—இப்போது உம்மிடத்தில் என்னென்ன ஔஷதங்கள் ஆஜரில் இருக்கிறது பண்டிதரே.

நிர்மூல-வ. ன்—என்னிடத்திலிருக்கிற ஔஷதங்கள்சொல்லுகிறேன் கேளுங்கள். ஆண்டவனே! அகஸ்தியர், போகர், தன்வந்திரி, தேரையர் முதலிய சித்தர்களாகிய மகான்கள் சிலாசாசனமாக எழுதிய வாகட மருந்துகளாகிய பூரணச்சந்திரோதயம் சண்டமாருதம, மன்மதகோலாகலம், அக்கினிசஞ்சீவிகுமாரன், சொர்னபஸ்பம், வாதராக்ஷஸம், அர்த்தனாரீஸ்வரன், பஞ்சதீபாக்கினி, கண்டவுஷதம் முதலிய மஹா ஔஷதங்கள் எல்லாம் என்னுடைய ஔஷதங்களுக்கு ஒப்பிட்டு பார்க்கையில் இந்தச் சித்தாதிகளுடைய ஔஷதங்கள் அணுவுக்கும்ச்சமானமாகாது என் மருந்தோ மகம்மேருவுக்குச் சமானந்தான். என் பெருமையை நானே சொல்லிக்கொள்வதில் பயன் ஒன்றுமில்லை. என் பெருமையை (Death Report) மரண அறிக்கை ரிஜிஸ்டரில் கண்டறியலாம். என் ஔஷத அனுபவத்தை தேவரீருங்கண்டறிந்து என்னை அரண்மனைப் பண்டிதராகத்தான் காயமாக்கப் போகிறீர். ஒருகாலத்தில் பரதபூர்சமஸ்தானத்தில் 'ஆக்டிங்டாக்

டராக வேலே பார்த்துக்கொண்டிருந்தேன்; பரத பூர் மகாராஜா என் வைத்தியத்தின் பாண்டியத்பத்தைப் பார்த்து எனக்கு சத வத பண்டிதர் என்றும் வைகுண்ட வைதியரென்றும் விருதுப் பெயர் கொடுத்தார்.

அநியாய-வன்—பண்டிதரே! அகஸ்தியர், போகர், தன்வந்திரி, தேரையர் முதலிய இவர்களைத்தான் மகாசித்தாகளென்று கேள்விப்பட்டிருக்கிறோம் உம்மிடவைத்திய பாண்டியத்பம் இவர்களுக்கு மேற்படுகிறதோ ?

நிர்மூல-ம. ன் மேற்படுவதும் கீழ்ப்படுவதும் நான் சொல்வதில் காரியமில்லே. நான் கலியுகத்தில் வரப்போகிறேனென்று இந்த சித்தர்களாகிய மகான்கள் முற்குறியறிந்து தமது ஔஷதக் களஞ்சியங்களை குப்பை வண்டிகளில் போட்டு மயிலாப்பூர் எரு மோட்டுக்கு அனுப்பிவிட்டு தாமும் பென்ஷன் பெற்றுக்கொண்டு மேலுலகத்திற் குமானத்தோடே கிளம்பிவிட்டார்கள்

அநியாய-ம. ன்—நீர் அவர்களுக்கு மேற்பட என்னென்ன ஔஷதங்கள் அற்புதமாய்க் கண்டுபிடித்தீர் ?

நிர் மூல-வ. ன்—சொல்லுகிறேன் கேளுங்கள். அரசே! லிங்கத்துக்கு ராமலிங்கம். பூரத்துக்கு செய்யான், வீரத்துக்கு சூரம், ரசத்துக்குமுருங்கைக்காய் குழம்பு, பாஷாணத்துக்கு ராமேஸ்வர நவபாஷணம் பூர்ணசந்திரோதயத்துக்கு மூன்றாம் பிறை சந்திரோதயம், இடிவல்லாதிக்கு உதைவல்லாதி, சண்டமாருதத்திற்கு உண்டைமாருதம், பிராணசஞ்சீவிக்குமரணசஞ்சிவி, ஜலக்கட்டுக்கு மலக்கட்டு, காதடைப்புக்கு கண்ணடைப்பு காக்காவலிக்கு மூக்காங்கயிறு முதலியன. சொல்வதற்குப் பொழுதிருந்தால் இன்னும் அநேக மருந்துகளுமுண்டே மகாப்ரபூ!

அநியாய-ம. ன்—ஐயா நிர்மூலவைத்தியரே! தீராத வயிற்று நோய்கண்டால் அதற்கு என்னமருந்து கொடுப்பீர்.

(நிர்மூலவைத்தியர் சொல் கவி)

### எற்று நோய்க்கு மருந்து

சில்திராமூலவேரை சுமைசுமை யாகவாங்கி
அத்துடன் எருக்கன்வேரும் அமைத்தொரு மிடாவில்காய்ச்சி
மொத்தமாய் படிகஷாயம் மடமடென் றேற்றிவிட்டால்
சுத்தமாய் வலிகள் தீர்நது சொல்லாமல் தூங்குவானே.

அநியாய-மன்—ஐயா வைத்தியரே! இந்த கஷாயம் உள்ளுக்குப்போனதே ஆனோவெளியில்தான் கொண்டுவரவேணும்! இவ்வளவு சட்டுபுட்டென்று தீர்க்கிற மருந்து நமது ஆஸ்பத்திரியில் கூடக்கிடையாது. இதிருக்கட்டும், சூட்டினால் வாய்வுமீறி மலஜலங் கட்டிக்கொண்டால் என்ன ஔஷதங்கொடுக்கிறது?

( நிர்மூலவைத்தியர் சொல் கவி )

### சூட்டுக்கு மருந்து.

சூட்டினால்வாய்வுமீறி ஜலபாதைக்கில்லையென்றால்
வாட்டிலோடுடன் வாளமுஞ்சேர்த்தரைத்து
மாட்டிப்பாரொரு மங்காய்ப்பிரமாணம்
கோட்டைகோட்டையாய் கழிச்சலெடுக்குமே

அநியாய-மன்—வெகு அற்புதமான மருந்து! இந்தமருந்து மாங்காய்ப்பிரமானம் உள்ளுக்கு போனால் தேங்காய்ப்பிரமாணம் கொழுப்பு தெருவிலே விழும்! இதற்குத்தடையில்லை. ஊருக்கு ஒலைபெபூதி ஆளுக்கு சாமான் வாங்க வேண்டியதுதான் இது இருக்கட்டும், மூலரோகத்தினால் வருத்தப்படுவதற்கு ஏதாகிலும் மருத்துண்டா.

(நிர்மூலவைத்தியர் சொல் கவி)

### மூலரோக மருந்து

மூலங்கண்டு முறைக்கிறபேர்க்கெலாம்
ஆலங்கட்டையின் ஆப்புசொருகினால்
காலுபேர்க்குமேல் ஞாயவரானகியே
காலைகிளப்புவான் கைமுறையுண்மையே

மூலத்திற்கு வேறுமுறை.

எட்டிக்கொட்டை சேங்கொட்டை
இதற்குசமநேர் வாளக்கொட்டை
தட்டிநறுக்கிக் கழுதைப்பாலில்
தானேயறைத்து அடுப்பேற்றி
காட்டிச்சுவரக் காச்சியதை
காலையொரேநாள் தூன்கொடுக்க
கட்டைவலுத்து நவமூலம்
காஷ்டமபோகும் கண்டீரே

அநியாய-மன்— மூலத்திற்கும் ஆளுக்கும் ஒரேமருந்தாய்த்தானிருக்கிறது! இதுதவிர தாதுபுஷ்டியில்லாமல் உடம்புஇளைத்து ஒத்தைநாடியாய்ப் போகிறவர்களுக்குஏதாவது தகுதியான மருந்திருந்தால் சொல்லுமையா பண்டிதரே?

(நிர்மூலவைத்தியர் சொல் கவி)

தாதுபுஷ்டிக்கு மருந்து.

முத்தினசேராங்கொட்டை மொத்தமாய்வீசைவாங்கி
கத்தபப்பாலுஞ்சீனி கற்கண்டுஞ்சேர்த்தரைத்து
சுத்தமாய்வழித்துவாரி சூரண்டியே தின்றுவிட்டால்
எத்தனைபரியாவான் யானையுந்தோற்றுப்போமே

அநியாய-மன்—ஐயா நிர்மூலவைத்தியரே இந்த தாதுபுஷ்டி மருந்தை அவசரப்பட்டு முன்னாடியாய் கொடுத்து விட்டால் பிற்பாடு ஆள் அடையாளமே தெரியாது. அவ்வளவு ஊதலேறி ஆள் பிரம்மாண்டமாய்ப் போய்விடுவான். ஆகையால் முதலிருந்த இருப்பை (பொட்டகிராப்) படம் பிடித்து வைத்துக்கொண்டு அதன்பிறகு தான் தங்களுடைய தாதுபுஷ்டி மருந்தைக் கொடுக்கவேணும். சரி இதிருக்கட்டும் வயசுபிள்ளைகள் கண்டயிடத்தில் கடமாடி வெள்ளை கொறுக்கு வாங்கிக்கொண்டால் அதற்கேதாவது கைகண்ட மருந்து இருக்கிறதா?

(நிர்மூலவைத்தியர் சொல் கவி)

வெள்ளைக்கு மருந்து

வெள்ளை நோய்மிகவே கண்டு வேஷ்டியிலொழுகுமாகில்
கள்ளிப்பாலெருக்கம்பாலில் கருப்பு கணணாடித்தூளை

அள்ளியாழாக்குபோட்டு அபக்கென்று குடித்துவிட்டால்
சள்ளைகளொழிந்துதேக சங்கடந் தீர்ந்துபோமே.

அநியாய-ம. ன்—இந்தமருந்து, நெஞ்சுக்குழியில் இறங்குவதற்குள் வெள்ளை, கருப்பு, சிவப்பு என்ன இருந்தபோதிலும் உடனே வெளிப்பட்டுபோகும் ஆளும் வெளிப்பட்டுப்போவான் இதிருக்கட்டும் பல் நோய்க்குத் தகுதியான மருந்திருக்கிறதா நிர்மூல வைத்தியரே?

நிர்மூலவைத்தியர் சொல் கவி.

பல்நோய்க்கு மருந்து.

ஒத்தப்பல் வலிகண்டாலு முடனிரு பக்கஞ்சேர்த்து
மொத்தமாய் மூன்றுபல்லும் வெடுக்கனப் பிடுங்கிவிட்டால்
சுத்தமாய் வினைகள் தீர்ந்து தொல்லையே மறந்துபோவான
மற்றயாருக்கு மிந்த மகிமையைச் சொல்லொணாதே,

அநியாய-ம. ன்—பல்நோய்க்கு இதுதான் அற்புதமான சிகிச்சை! இந்தசிகிச்சை ஆரம்பிக்கும்போதே ஆள்பாடு மாருட்டமாய்ப்போகும். இது இருக்கட்டும் பித்தம் அதிகரித்து தலைமயக்கங்கொண்டு பிதற்றுகிறவர்களுக்குத்தக்க மருந்திருக்கிறதா பக்குவமான வைத்தியரே?

(நிர்முலவைத்தியர் சொல் கவி)

பித்தத்திற்கு மருந்து,

ஊமத்தங்காயுடனே கஞ்சாவித்தும்
ஓயாமல் பூபூக்கும் அலரிவேரும்
நேமமா யிலுப்பெண்ணெய் விட்டுமைபோல்
நெகிழவரைக் தோருண்டை விளங்காய்போலே
ஆவென்று வாய்திரக்கச் சொல்லிப்போட்டு
அமுக்கிவிடு காலைமாலை மூன்றுவேளை
நாமமேது ஆளேது பித்தமேது
நாலாறு பேருடனே நடைகொள்வானே,

அநியாய-ம. ன்— ஐயா நிர்முலவைத்தியரே வெகு அருமையான மருந்து! பித்தம் அடியோடறுந்து பரலோகத்தை யெட்டிப்பார்ப்பான் மற்ற மருந்துகள் வேண்டியதில்லை தலைவலிக்கு மாத்திரம் கைகண்ட மருந்துகளிருந்தால் சொல்லும்.

(நிர்மூலவைத்தியர் சொல் கவி)

தலைவலிக்கு மருந்து.

தலைவலிகண்டதென்று தவிக்கிற மனிதர்க்கெல்லாம்
மலைதனில்பெருத்தகல்லை வண்டிமேலேற்றிக்கொண்டு
தலைதனைக் கீழேவைத்து மலைக்கல்லை பிரட்டி விட்டால்
தலைவலி போச்சுதென்று தரணியிலுரை செய்யானே

அநியாய-ம. ன்--இன்னேரம் சொன்ன மருந்திற்கெல்லாம்இதுதான் நிர்மூலமருந்து பாராங்கல்லைப்போலே பளிச்சென்று தீர்க்கிற மருந்து வேறேகிடையாது. உம்முடைய கைமுறை யெல்லாங் கேட்கும் போதே குடல் நடுநடுங்கிறது. இந்த மருந்தெல்லாம் வேண்டியதில்லை. தற்காலம் மீசைதாடிகள் நரைத்து முன் மூஞ்சி வெளுப்பேரினபடியால் சபையில் உட்கார அருவெறுப்பாயிருக்கிறது ஆகையால் அனுபோகப்பட்டதாயும் சுலபமாய் செய்யக்கூடியதாகவுமிருந்தால் அதை மாத்திரம் சொல்லுமையா வைத்தியரே.

(நிர்மூலவைத்தியர் சொல் கவி)

நரைமயிருக்கு மருந்து.

கருத்தராம்பிளாக்கு வாங்கி கார்ஷிக்கு சமனாய்கூட்டி
நரைத்தவர்முகத்தில் மூன்று நாலைந்து பூசல்பூசி
திருத்தமாய் நெருப்பிற்காட்டி தீப்படவாட்டினக்கால்
வருத்தமில்லாமல் வெள்ளை மயிரெலாங் கருத்துப்போமே,

அநியாய-ம. ன்--அடேயப்பா! ஒவ்வொன்றும் ஆளைக்கிளப்புகிற அநியாயமான மருந்து! நமது அநீதி செங்கோலுக்கு வேலைவேண்டியதேயில்லை. நீரொருவரிருந்தால் வெகு சீக்கிரத்தில் ஒழியும் போலிருக்கிறது! இனியும் மருந்தைக்கேட்க என்னால் முடியாது அதோ கொலைப்பாதக மந்திரிக்கு உன் மருந்தெல்லாம் சொன்னாலும் சொல்லு உன்னுக்கே கொடுத்து ஒழித்தாலும் ஒழித்துவிடு.

கோலைப்-ம. ரி-- ஐயா நிர்மூலவைத்தியரே ஜன்னிக்கு என்ன ஔஷதம் பிரயோகிப்பீர் ?

நிர்மூல-வ. ன்—சீதள ஜன்னியாயிருக்குமாகில் ஜன்னிகண்டவுடனே புளித்த கன்னிடையர் தயிர் உழக்கு புளித்த பத்து நாள் பழையது ஆறுபிடி, முழு எலுமிச்சை ஊறுகாய் ஒன்று சட்டியில்போட்டு பிரட்டி யெடுத்து விளாங்காய்ப் பிரமாணத்துக்கு மூன்று உருண்டை உள்ளுக்கு கொடுத்துப் புதுபாண்டத்தில் வைத்து குளிர்ந்த ஜலத்தில் உழக்கு ஜலம் குடிப்பித்தால் ஜன்னி யொழிந்து சீட்டு கிழிந்து உலகப்பற்று உடனேயறும் துரையே ?

கோலேப்-ம. ரி—நீர் எவ்வளவு காலம் தொண்டர்களிடத்தில் தொண்டு செய்து இவ்வருமையான ஔஷதத்தைக் கிரகித்தீரோ ? இருக்கட்டும், சூடுமிகுந்தால் என்ன ஔஷதந் தருவீர்.

நிர்மூல-வ. ன்—சூட்டுக்கு காட்டிலெங்கும் அகப்படாத வாட்டமான வாகடமருந்தொன்று இருக்கிறது சொல்லுகிறேன் சோர்வின்றி செவிகொடுங்கள், துரைகளே! சூடு மிகுந்து ஓடுபோல் வெட்டையாய் விட்டால் சித்தௌஷத மூலிகையான சித்திரமூலம் சமூலம் பலம் ஐந்து இடித்துப்போட்டு இரண்டு படி ஜலம்விட்டு கால்படியில் இறக்கி இரண்டரை பலம் வெடிகந்தம் பொடிபண்ணி அந்த சித்ரமூலக் கியாழத்தில் போட்டு இதே முறையான அளவில் சந்திதோறும் ஐந்து நாளைக்குச்சாப்பிடலாம் வெட்டை யொழிந்து கட்டையுலர்ந்து காலனாருக்குக் கடுக கடைத்தேறுவான்.

சொலேப்-ம ரி—வைத்தியரே வெட்டைக்கு மருந்து கொட்டை வெடிக்கத்தான் சொன்னீர்! அது இடம் பிளந்து முட்டத்தரை தான் தேடும். நீர் தாது புஷ்டிக்கு என்ன ஔஷதம் தருவீரோ சொல்லும் பார்ப்போம்.

LA816.

நிர்மூல-வ ன்—மகாப்பிரபு! தாது புஷ்டிக்கு தேவர்களாலும் தேடிஅமையாத தேவந்திர திரவம் என்று ஓர் ஔஷதமுண்டு அது கைகண்ட மருந்து செலவும் ரொம்ப கொள்ளாது கேளுங்கள் சொல்லுகிறேன், நாள் ஒன்றுக்கு இரண்டரை பல

ம் கடுக்காய்ப் பிஞ்சு தூளிடித்து உழக்கு ஜலத்தில் இராத்திரிக்கே ஊறப்போட்டு பொழுது விடிந்ததே அடுப்பிலிட்டுக்காச்சி அதை வேறு பாத்திரத்தில் இறுத்துக்கொண்டு அரைப்பலம் எட்டிக்கொட்டையை குட்டிக்கழுதையின் சிறுநீர் விட்டுநெகிழ அரைத்து கடுக்காய் ஜலத்தில் கலக்கி இப்பூமண்டலத்தில் எவன் ஒரு மண்டலம் சாப்பிடுகிறானோ அவன் பதினாயிரம்கோபிகாஸ்திரீகளுக்குப் பதியாயிருந்த கார்மேக வண்ணக் கண்ணனுக்குத் திண்ணனாகத்தானிருப்பான். அரசே! இது மதனகாமேசுர குளிகைக்கு எதிரிடையான நபும்சக நாசகாரி திரவம்என்று பெயர்,

கொலைப்-மரி—ஓய் தன்வந்திரிக்குத் தலைப்பிள்ளை போன்ற பண்டிதரே! நீர் இப்போது சொல்லிய ஔடதங்களெல்லாம் இராஜ வைத்தியத்திற்கு உரியதோ சாமன்ய ஜனங்களுக்குரியதோ.

நிர்மூல-வன்—ஆண்டவனே இப்பேர்க்கொத்த கண்டவுஷதங்களுக்கு சமஸ்தான பதிகளேயல்லாது சாமான்யமான சாக்கடை ஜனங்கள விலைகளும் வெகுமதிகளுங்கொடுத்து மீளமாட்டார்கள். துரையே சாமான்ய ஜனங்களுக்கு அவரவர்ஏழைமைக்குத் தக்கவேறு சுலபமான மருந்துகள் உண்டு அவைகளைத்தான் அவர்களுக்கு உபயோகிப்பது.

கொலைப்-ம. ரி—உமது ராஜவைத்திய முறை எமதர்மராஜனை எழுப்பப்பார்க்கும், யூனனி வைத்தியத்தை உதைத்துத் தள்ளும். ஏழைகளுக்குச் செய்யும் சாமான்ய வைத்தியத்தில் ஓர் ஔஷதத்தைச் சொல்லும் கேட்போம்.

நிர்மூல-வன்—மகாப்பிரபு வெகுகாலம் என்னையடுத்தாவது எனக்கு வேண்டும் பொருள் அளித்தாவது எனக்கு பிராணனாயிருந்து என்திருவடிகளை நம்பித்தொண்டுசெய்திருந்தால் அப்பேர்க்கொத்தவனுக்கு அந்தரங்கமாகச் சொல்லத்தக்க மதனகாமேஸ்வரி லேகியம் என்கிறது ஒன்றுண்டு. தேவரீரைவிட

பொருள்தர வல்லவர் வேறொருவருண்டோ? தங்களுக்குச்சொல்லாவிடில் வேறெவருக்குத்தான் சொல்லப்போகிறேன். சொல்லுகிறேன் கேளுங்கள் பிரபு. சீமை பாறுமைக்கொட்டைகளைப் பிளந்து பருப்பெடுத்து ஆவின்பால் விட்டரைத்து பசும்பாலுடன் பாகஞ்செய்து மணமான நெய்யும் மதுரமான சக்கரையுஞ் செவ்வையாய்ச் சேர்த்து நெய்யிற் பொரித்த முதிர்சுவை மூந்திரிப்பருப்பை மசப்பாய் சேர்த்து பதமாகக்கிளறி ஏலத்தூள் வுள்ளிப்போட்டு பொற்றும்பாளத்திலிட்டு செவ்வாழையுடன் செவவையாயுண்டு ஆவின பாலரைப்படி சாப்பிட்டால் கிழவன் குமாரனவான்.

கொலைப்-ம. ரி—நீர் இப்போது சொல்லி வந்த ஔஷதரத்னங்களுக்கெல்லாம் இது ஜீவரத்னம்! இதை மதன காமேஸ்வரி என்றும் சொல்லலாம் மனமோஹனேஸ்வரி யென்றுஞ் சொல்லலாம். பேஷ் பேஷ்! சடாஷ்! நீர்தான் நம்முடைய அரண்மனைப் பண்டிதராகலாம்.

நிர்மூல-வ.—மகாப்பிரபு! அகஸ்தியர், தன்வந்திரி, தேரையர் போகர் இவர்கள் ஏதோ ஒரு மார்க்கத்தையே அனுசரித்து லோகோபகாரமாக வாகடங்கள் செய்தளித்தோமெனகிற பிரட்டுப்பெயர் பெற்றார்களே யல்லாது ஈஸ்வரப்பிரீதியாய் ஒன்றும் லோகோபகாரமாகச் செய்து விடவில்லை பெரும்பாலுஞ் செல்வச் செருக்கருக்கே உபயோகிக்கத் தக்கதாக மேற்கூறிய வாகடத்திற்கு மேற்பட ஒன்று உண்டுபண்ணி யிருக்கிறேன். அது முக்கியமாய் செல்வச்செருக்குடையோருக்கு நேரிடுகிற ஓர் கொடியவியாதிக்கே உபயோகிக்கப்படும்.

கொலைப்-ம. ரி—ஐயா பெரியவரே அதை முன்னே சொல்லி உமது வைத்தியக்கட்டுகளைச் சுருட்டிகக்கத்தில வையும்.

நிர்மூல-வ. ன்—சொல்லுகிறேன் கேளுங்கள் மகாப்பிரபு! "பெரித்திடு செல்வமென்ற பிணிவந்துற்றிடில், உருத்தெரியா மலேயொளிமயங்கிடும், மருந்துளதோவெனில் வாகடத்திலலை, தரித்திரமென்னு மருந்திற்றீருமால்"

கொலைப்-ம. ரி—ஓய் பண்டிதரே! செல்வவான்களெல்லாம் தரித்திரவான்களாகவேண்டுமென்று தானோ உம்மிடவாகடம் சொல்லுகிறது! சரி சரி நீர் பொளைக்கிற பொளைப்புக்கு புளை மோசந்தான்வரும்.

நிர்மூல-வ. —அதல்ல கருத்து மகாப்பிரபு! அஞ்ஞானிகள் கூட அவ்வாறு நினைக்கமாட்டார்களே! நாடெங்கும்வாழக் கேடொன்றுமில்லை. நாடெங்கும் வாழ நடுவில் நாம்வாழ, தரணி எப்போது பாழோ தானும் அப்போதே பாழ், செடியின் கீழ் தஞ்சம் புகவேண்டும். பின் இதன் கருத்து என்னவெனில் உலகத்தின் கண் குணபூஷணராயிருக்கிற கனவான்கள் தம்மில் தாழ்ந்தவரை இகழ்ந்துரையாமலும் புண்படச், சொல்லாமலும் சமரச சுபாவத்தைத் யுடையவரை நோக்கிச் சொன்னதல்ல. பின்னர் அவ்வாறல்லாமல் ஏழையழுத கண்ணீர் கூரியவாளொக்குமென்பதை எண்ணாமல் களிக்கச சொல்வோரைசுட்டிக்காட்டிச் சொன்னதே அல்லாமல் வேறன்று. சுபமஸ்து.